செ.வெ.எண்: 21 நாள்:26.05.2021

**கரூர் மாவட்டம்**

**கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வரும் நபர்களுக்கு முதலமைச்சரின் மருத்துவக்காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் சிகிச்சையளிக்க அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகள் மற்றும் கட்டணவிபரம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு அனைத்து மக்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலமாக இலவச மருத்துவ சேவைகளை செயல்படுத்தி வருகிறது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கோவிட்–19 சிகிச்சைக்கான தொகுப்பு வீதம், தற்போதுள்ள தொற்றுக்காலத்தில் மக்கள் நலன் காத்திடவும், கட்டணமில்லா சிகிச்சை வழங்கிடவும் திட்டப் பயனாளிகளுக்கும், பொதுமக்களுக்கும் தனியார் மருத்துவமனைகளில் கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் கீழ்கண்ட தனியார் மருத்துவமனைகள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

| அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் | தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் |
|---|---|
| 1. அமராவதி மருத்துவமனை, கரூர்<br>2. அப்பல்லோ லோகோ மருத்துவமனை, கரூர்<br>3. G.C.மருத்துவமனை, கரூர்<br>4. ஸ்ரீரத்தினா மருத்துவமனை, கரூர்<br>5. நாச்சிமுத்து மருத்துவமனை, கரூர்<br>6. அபிஷேக் ஆர்த்தோ மருத்துவமனை, கரூர்<br>7. ராஜ் ஆர்த்தோ மருத்துவமனை, கரூர் | 1. ABS மருத்துவமனை, கரூர்<br>2. கபிலா மருத்துவமனை, கரூர்<br>3. கரூர் நர்ஸிங்கோம் மருத்துவமனை, கரூர்<br>4. கிருஷ்ணா மெடிக்கல் சென்டர், கரூர்<br>5. K.G. மருத்துவமனை, கரூர்<br>6. APJ மருத்துவமனை, கரூர்<br>7. செந்தில் எமர்ஜென்சி கேர் மருத்துவமனை, கரூர்<br>8. தீபா கண்ணன் மருத்துவமனை, கரூர்<br>9. நாதன் மருத்துவமனை, கரூர்<br>10. அமிர்தா மருத்துவமனை, கரூர்<br>11. அனன்யா ஆர்த்தோ கேர் மருத்துவமனை, கரூர்<br>12. ஸ்ரீசக்தி மருத்துவமனை, கரூர்<br>13. சுனேத்ரா மருத்துவமனை, கரூர் |

<u>கட்டண விபரம்</u>

<u>முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தீவிரமில்லாத (Non-critical) மற்றும் அதி–தீவிர கோவிட்–19 சிகிச்சைக்கான (Critical Cases) புதிய சிகிச்சைக் கட்டணம்(ரூபாய்)</u>

| உள்ளடக்கம் | தீவிரமில்லாத கோவிட்–19 சிகிச்சை (Non-critical) | | அதி–தீவிர கோவிட்–19 சிகிச்சை (Critical Cases) | | |
|---|---|---|---|---|---|
| | மிதமான ஆக்ஸிஜன் உதவி இல்லாமல் | ஆக்ஸிஜன் உதவியுடன் | தீவிர சிகிச்சைப் பிரிவு வென்டிலேட்டர் வசதியுடன் | தீவிர சிகிச்சைப் பிரிவில் ஊடுருவாத வென்டிலேட்டர் வசதி( Non-invasive ventilation) (CPAP/Bi-PAP) | தீவிர சிகிச்சைப் பிரிவு ஆக்ஸிஜன் வசதியுடன் (ஆக்ஸிஜனுடன் கூடிய தீவிர சிகிச்சை படிப்படியாக குறைப்பதற்கு ட்டும் (ICU with O2 only as stepping down) |
| | வகை– 1 | வகை– 2 | வகை– 3 | வகை– 4 | வகை– 5 |
| அறைக்கட்டணம், மேற்பார்வை, நிருவாக செலவினங்கள் பராமரிப்பு செலவினங்கள், அடிப்படை மருத்துவ உபகரணங்கள் (INTERVENTIONS VIZ N-G TUBE INSERTION CATHETERISATION ETC) | 600 | 2000 | 5000 | 4000 | 3000 |
| அடிப்படை மருந்துகள் மற்றும் பரிசோதனைகள் | 600 | 4000 | 6000 | 6000 | 5000 |
| ஆக்ஸிஜன் மற்றும் அதன் தொடர்பான இதர இனங்கள் | 300 | 2000 | 7000 | 5000 | 4000 |
| கோவிட்–19 கூடுதல் பராமரிப்பு கட்டணங்கள் COVID-19 ADDITIONAL MANAGEMENT CHARGES INCLUDING BUT NOT LIMITED TO PPE KITS PROFESSIONAL CHARGES SANITISATION OTHER CONSUMABLES. ETC., | 3500 | 7000 | 17000 | 15000 | 13000 |
| நாளொன்றுக்கு ஒரு நபருக்கான மொத்த சிகிச்சை கட்டணம். | 5000 | 15000 | 35000 | 30000 | 25000 |

D-Dimer, IL6, LDH போன்ற பரிசோதனைகளுக்கு கூடுதல் கட்டணம் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

Remdesivir, Tocilizumab, Itolizumab etc., போன்ற மருந்துகளுக்கு கூடுதல் கட்டணம் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

பணம் செலுத்துதல் மற்றும் செயலாக்கத்திற்கான வழிகாட்டுதல்கள் தனியாக வழங்கப்படும்.

கொரோனா தொற்று மிக அதிகமாக பரவி வரும் இந்த சூழலில் மக்கள் எவ்வித தொய்வுமின்றி உரிய நேரத்தில் சிகிச்சை பெறுவதற்காக, பொது மக்களின் இன்னுயிர் காக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கோவிட்–19 சிகிச்சைக்கான கட்டணம் தனியார் மருத்துவமனைகளில் தீவிரமில்லாத சிகிச்சைக்கு ரு.5000/– முதல் 7500/– வரையும், தீவிர சிகிச்சைக்கு ரூ.15000/– எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. இக்கட்டணமானது தற்போது முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு இணையாக கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது.

**<u>தனியார் மருத்துவமனைகளில் பொது மக்களுக்கான கோவிட்–19 தொற்று சிகிச்சைக்கான கட்டணம்</u>**

| வ.எண். | சிகிச்சை விபரம் | நாளொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம்(ரூபாய்) |
|---|---|---|
| 1 | ஆக்ஸிஜன் அல்லாத படுக்கை வசதி | ரூ.5000/– முதல் ரூ.7500/– வரை |
| 2 | ஆக்ஸிஜனுடன் கூடிய படுக்கை வசதி | ரூ.15000/ |
| 3 | வெண்டிலேட்டருடன் கூடிய தீவிர சிகிச்சை | ரூ.35000/ |
| 4 | தீவிர சிகிச்சைப் பிரிவில் ஊடுருவாத வென்டிலேட்டர் வசதி வென்டிலேட்டர் ( Non-invasive ventilation) (CPAP/Bi-PAP) | ரூ.30000/ |
| 5 | ஆக்ஸிஜனுடன் கூடிய தீவிர சிகிச்சை படிப்படியாக குறைப்பதற்கு மட்டும். (ICU with O2 only as stepping down) | ரூ.25000/ |

கோவிட்–19 சிகிச்சைக்காக அதிகரிக்கப்பட்ட கட்டணத் தொகையானது இரண்டு மாதங்களுக்குள் தொற்றின் தன்மைக்கேற்ப மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

தனியார் மருத்துவமனைகளில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைவிட கூடுதலான தொகை வசூலிக்கக் கூடாது. அவ்வாறு வசூலிக்கப்பட்டால் பாதிக்கப்பட்ட நபர் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண் 8004253993 மற்றும் 104 என்ற எண்களில் புகார் அளிக்கலாம். எனவும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு https://www.cmchistn.com/ என்ற இணையதள முகவரி மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.

புகார் தகுந்த ஆதாரங்களுடன் நிருபிக்கப்பட்டால் நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் ஒழுங்கு படுத்துதல் சட்டம் (Clinical Establishment Act) மற்றும் பேரிடர் மேலாண்மை சட்டம் (Disaster Management) ஆகிய சட்டங்களின் கீழ் மருத்துவமனை மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கூறிய கட்டணம், முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் பயனாளிகள் மற்றும் இதர பொதுமக்கள் அனைவருக்கும் பொருந்தும். முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற விரும்புவோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் பொழுது காப்பீட்டுத் திட்டத்தின் அடையாள அட்டை காட்ட வேண்டும் மற்றும் மருத்துவ விருப்பப் படிவம் நிரப்பப்பட வேண்டும்.

காப்பீடு அட்டை தொலைந்துவிட்டாலோ அல்லது உள்ளதா என்று அறியாவிட்டாலோ அவர்களது பழைய அல்லது புதிய குடும்ப அட்டை எண்ணை சம்பந்தப்பட்ட மருத்துவமனையில் உள்ள காப்பீட்டு திட்ட அலுவலர்(Insurance Co-ordinator) அல்லது மாவட்ட காப்பீட்டு திட்ட அலுவலர் (7373004341, 7373003809) அல்லது மாவட்ட கட்டுப்பாட்டு அறை 1077–ஐ தொடர்பு கொண்டு தங்கள் காப்பீட்டு அட்டை நிலை குறித்து அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.